## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

O.S.No. 6/2018

DW1 செல்லம்மாள் நாள் 15.03.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1989 ல் வாதியின் தந்தை ஜெயபிரகாஷ்க்கும் தாய் சாந்திக்கும் திருமணம் ஆகி 3 மாதத்தில் பிரிந்துவிட்டார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1989 லிருந்து 1997 வரை சாந்தி தன் கணவருடன் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு சாந்தியை பிடிக்காததால் அவரை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. அதனால் சாந்தி அவருடைய குழந்தையுடன் அவருடைய ஊருக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. திருமணம் ரத்து ஆனபிறகு தான் திருமணம் செய்து வைத்தேன். ஜெயபிரதா என் மகனின் சட்டப்படியான மகள் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் மற்றும் என் கணவரின் சொத்தில் ஜெயபிரதாவிற்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்து என் கணவரின் சொத்து என்பதால் அதில் ஜெயபிரதாவிற்கு பங்கு சட்டப்படி உள்ளது என்றால் சரியல்ல. என் கணவரிடம் இருந்து போலி ஆவணங்களை தயார் செய்து என் பெயரில் சொத்தை மாற்றிக்கொண்டேன் என்றால் அதனால் B அட்டவணை சொத்திலும் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. B அட்டவணை சொத்திற்கு என் பெயரில் பட்டா இருப்பதால் அது என்னுடைய சொத்து ஆகாது என்றும், பட்டா ஒரு ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. என் மகள் விஜயாவுக்கு வாரிசுரிமை திருத்த சட்டத்திற்கு முன்பாகவே திருமணம் ஆனதால் அவருக்கு A அட்டவணை சொத்தில் பங்கு இல்லை என்றால் சரியல்ல. என் மகனின் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த பிள்ளைகளுக்கு பூர்வீக சொத்தில் பாத்தியம் இல்லை என்றும், என் மகன் சம்பாதித்த சொத்தில் தான் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 2 வது மனைவி மூலம் பிறந்த குழந்தைகளை வழக்கில் சேர்க்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்தில் 04.07.1999 ல் எழுதப்பட்ட அசல் உயிலை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 8 வது அயிட்ட சொத்து குறித்து எழுதிய உயில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்குரையில் சொல்லியுள்ள 4 உயில்களின் அசலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 11.03.1987 தேதியிட்ட உயில் 30.11.1993 தேதியிட்ட உயில் 14.07.1999 தேதியிட்ட உயில், 12.05.2004 தேதியிட்ட உயில்களின் ஜெராக்ஸ் நகல்களை தான் நான் தாக்கல்

செய்துள்ளேன் என்று சொன்னால் அசலை தான் தாக்கல் செய்துள்ளேன். நானும் என் மகளும் சேர்ந்து தான் மோசடியான உயில்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி என்னுடைய சட்டப்படியான பேத்தி என்பதால் அவருக்கும் நான் பாகம் கொடுத்து தான் ஆகவேண்டும் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்துக்களின் கூட்டு பங்காளி என்ற முறையில் வழக்கு போட்டுள்ளார் என்றும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.